DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No:CC.14/2025**
Prosecution witness **PW.7(LW.3)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr. Shankar | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused A1 to A4 Present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **02.09.2025**

**02.09.2025 முதல் விசாரணை** :

நான் குன்னூர் ஓரநள்ளி கிராமத்தில் குடியிருந்து டாஸ்மாக்கில் சூப்பர் வைசராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சுந்தரியை எனக்கு தெரியும். அவரும் எங்களது கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறார். ஆஜர் 1 முதல் 4 எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்களது பக்கத்து கிராமத்தில் குடியிருந்து வருகிறார்கள். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும்.

1) 24.03.2018 – ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் அன்றையதினம் எங்கள் ஊர் திருவிழா என்பதால் எதேச்சியாக அ.சா.1 சுந்தரியின் வீட்டின் வழியாக நான் கீழே இறங்கி சென்று கொண்டிருந்தபோது ஆஜர் 1 முதல் 4 எதிரிகள் சுந்தரியின் வீட்டு வாசலில் நின்றுகொண்டு அவருடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சென்று 1 ஆம் எதிரி மேகனாவிடம் ஏன் ஒரு ஊரில் இருந்து இன்னறொரு ஊருக்கு வந்து இப்படி சண்டை செய்கிறீர்கள் என்று கேட்டேன். அப்போது அவர் தோட்ட பிரச்சனை என்று சொன்னார். ஒரு ஊரில் இருந்து மற்றொரு ஊருக்கு வந்து சண்டை செய்வது தவறு என்றும் எதுவாக இருந்தாலும் பேசி தீர்த்துக்கொள்ளுங்கள் என்று நான் அவரிடம் சொன்னேன்.

பின்னிட்டு எதிரிகளும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நானும் அங்கிருந்து சென்றுவிட்டேன். வழக்கு தொடர்பாக மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** : வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** :

//ஒப்பம்.//R.அப்துல் சலாம்,
நீதித்துறை நடுவர்,
குன்னூர்.